<u>DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

Case No. : C. C. No.207/2023

Prosecution Witness : P. W. 5

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்தன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 11/02/2026

Accused Absent.

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

நான் தற்போது ஞாயிறு கிராமத்தில் வசிக்கிறனே் 03.02.2023 ல் நான் எங்கள் வீட்டிலிருந்து தெருவில் நடந்து கொண்டிருந்த போது போலிசார் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். நான் என்னவென்று கேட்டேன் அதற்கு அண்ணாமலை என்பவர் சூர்யாவை அடித்து விட்டதாக சொல்லி விசாரணை செய்து வரைபடம் வரைந்து என்னை சாட்சியாக இருக்க கேட்டார்கள். நான் ஒரு கையெழுத்து போட்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையொப்பங்களில் முதல் கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

எத்தனை போலிசார் இருந்தர்கள் என்றால் 6 7 பேர் இருந்தார்கள். பொதுமக்கள் எத்தனை

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

பேர் இருந்தார்கள் என்றால் 15 பேர் இருப்பார்கள். குறிப்பாக என்னை மட்டும் தான் கையெழுத்து கேட்டதால் நான் போட்டேன் என்றால் சரிதான். அந்த தாளில் உள்ள விவரங்கள் படித்து பார்த்து கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். சூர்யா எனக்கு உறவினர் என்றால் பெரியம்மா மகன் ஆவார்.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No.** : **C. C. No. 207/2023**

**Prosecution Witness** : **P. W. 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : அஞ்சலி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 11/02/2026

Accused Absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது ஞாயிறு கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஓட்டலில் வேலை செய்கிறேன். எனக்கு தேதி நினைவில்லை. எனக்கு இரணடு மகன்கள். அவர்களில் சூர்யா இளைய மகன் ஆவரார் அதில் சூர்யாவிற்கும் எதிரிக்கும் ஏற்கனவே நட்பு முறை இருந்தது. எதற்காக பிரச்சனை ஏற்பட்டு இருவரும் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்று தெரியவில்லை. அண்ணாமலை சூர்யாவை அடித்து போட்டுவிட்டு சென்றுவிட்டார். அதன் பின் சூர்யாவின் மற்ற நண்பர்கள் மருத்துவமனையில் சேர்த்த பின்பு தான் தகவல் கொடுத்தார்கள். சூர்யாவிற்கு முக தாடை எலும்பும், முதுகு எலும்பும் இதனால் உடைந்து விட்டது. உள்நோயாளியாக 1 மாதம் சிகிச்சை பெற்றார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

SHANKARAN MANJULA — Digitally signed by SHANKARAN MANJULA

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

நேரடியாக எதுவும் எனக்கு சம்பத்தை குறித்து தெரியாது என்றால் சரிதான். எனக்கு தகவல் யார் அளித்தார்கள் என்று நான் பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். தகவல் அறிந்து நான் மருத்துவமனை சென்று பார்த்தேன் அங்கு அடிபட்ட விவரம் எனக்கு தெரிந்தது என்றால் சரிதான். அடிபட்ட சமயத்தில் சூர்யா மது போதையில் இருந்தார் என்றால் தெரியாது. அடிபட்ட விவரங்கள் என் மகன் எனக்கு சொல்லி தெரியும் என்றால் சிகிச்சை பிறகு கண் விழித்து பார்த்து அண்ணாமலை அடித்ததாக சொன்னார்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA